DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 SEPTEMBER - 2025 No. 09



மனநலம் காப்போம்!
உடல்நலம் மீட்போம்!!
உன்னத இறைவனின் ஆலயமாவோம்!!!




ஆகஸ்ட் – 10 கருப்புதின நிகழ்வுகள் : கும்பகோணம்




புதிதாக கட்டப்பட்ட மக்கள் மன்றம் : இறவாங்குடி




புதிதாக கட்டப்பட்ட சத்துணவுக்கூடம் : திருக்காவலூர்



பெரம்பலூர் மறைவட்ட மேய்ப்புப்பணி பேரவை கூடுகை

ஆயரின் செய்தி
ஆரோக்கியமே அடித்தளம்!!

அன்பார்ந்த சகோதரிகளே, சகோதரர்களே!

நல்ல ஆரோக்கியம் என்பது இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்க வேண்டிய ஒப்பற்ற செல்வம். பணம், புகழ், படிப்பு, அந்தஸ்து, மதிப்பு, மரியாதை, செல்வாக்கு, அதிகாரம், மேட்டிமை போன்றவைகள் மட்டுமே ஒருவனுக்கு முழுமையான, நிறைவான, நிம்மதியான வாழ்வை கொடுத்துவிடுவதில்லை. ஒருங்கிணைந்த நல்ல உடல் நலமும், மன நலமுமே ஒருவனை நிம்மதியாக இந்த மண்ணில் வாழவைக்கும்.

பங்குச் சந்தையின் அதிபதியும் 13 ஆயிரம் கோடிக்கு சொந்தக்காரருமான ஜுன்-ஜுன் வாலா, "எனது மோசமான முதலீடு எனது ஆரோக்கியம். உங்கள் அனைவரையும் ஆரோக்கியத்தில் அதிக முதலீடு செய்யுமாறு நான் பரிந்துரைக்கிறேன்" என்று தான் இறக்கும்போது கூறிவிட்டு சென்றார். உலக பணக்காரர்களில் ஒருவரான Steve Jobs, "வர்த்தக உலகத்திலேயே பல கோடிகளைக் குவித்துவிட்டேன். நான் ஒரு உலகப் பணக்காரன், ஆனால் மருத்துவமனையிலே இருந்தபோதுதான் என்னிடம் இருக்கின்ற பணம், என்னுடைய புகழ் அத்தனையும் என்னுடைய மோசமான உடல் நிலைக்கு முன்னால் செல்லாக்காசாகிவிட்டது என்று நான் உணர்கிறேன். அந்த மருத்துவ உபகரணங்களின் சப்தம் மட்டுமே எனக்கு கேட்கிறது. என்னுடைய உடல் வலியை என்னால் தாங்க முடியவில்லை. எத்தனை கோடி கேட்டாலும் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன், இந்த வலியை மட்டும் யாராவது எடுத்துக்கொண்டுவிட்டால்..... நான் தவறு செய்துவிட்டேன். பணத்தை விட மிக முக்கியமானது உடல் நலம்தான் என்பதை தயவுசெய்து எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அவர் உயிர்விட்டார். எனவே, வாழ்வின் தலைமையான செல்வமும், வாழ்வின் முதலான செல்வமும் உடல் ஆரோக்கியம் மட்டுமே என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

முகமலர்ச்சி, நிதானமான வாழ்க்கை, அமைதி இவை உள்ள இடத்தில் வைத்தியருக்கு வேலையில்லை என்கிறார்கள் **ஜெர்மானியர்கள்.**

மனநலமே உடல் நலம் என்கிறார்கள் **உளவியலாளர்கள்.**

மனமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை என்கிறார் **அகத்திய முனிவர்**.

மனம் போல் வாழ்க்கை என்கிறது **தமிழ் மரபு.**

உடல் நலமும், மன நலமும் பிரிக்க முடியாத ஒரு இணைப்பைக் கொண்டிருக்கின்றது. உடல் ஆரோக்கியம் என்பது பெரும்பாலும் மனதையும், அறிவையும் பொருத்தே அமைகிறது. மனதையும் அறிவையும் சரிசெய்யும் போதுதான் உடல் நலமுடன் இருக்கிறது. மனம் என்பது எப்போதும் பிடித்தது பிடிக்காதது பற்றி ஆராய்ச்சி செய்யும். அறிவு என்பது எப்போதும் நல்லது கெட்டது பற்றி ஆராய்ச்சி செய்யும். இரண்டையும் இணைத்து சமநிலை செய்து கொண்டு செல்லும் போதுதான் உடல் ஆரோக்கியம் அமைகிறது. ஒரு மனிதனின் ஆரோக்கியம் என்பது மனதிற்கும் பிடித்திருக்க வேண்டும், அறிவுக்கும் உகந்ததாக இருக்க வேண்டும். நல்ல விடயத்தை பிடித்து செய்தால் ஆனந்தம், பிடித்த விசயம் நல்ல விடயமாக இருந்தால் பேரானந்தம், அறிவாளியாக மட்டும் வாழ்வதும் சரியானதல்ல, மனதிற்கு பிடித்தவாரெல்லாம் வாழ்வதும் நல்லதல்ல. இரண்டும் கலந்து சமநிலை செய்து வாழ்வதே ஆரோக்கியமான வாழ்வாகும். மனதும் மகிழ வேண்டும். அறிவும் மகிழ வேண்டும். மனதும் அறிவும் சேர்ந்து செல்வதே ஆரோக்கியமான வாழ்க்கை. அப்போது மட்டும்தான் உடல் ஆரோக்கியமாக இருக்கும். எனவே, உடல், மனம், அறிவு, மூன்றையும் ஆரோக்கியமாக வைத்து வாழ்வதே நிலைத்த நீண்ட பேரின்ப வாழ்க்கையாகும்.

நாம் வாழும் இந்த உலகம் பஞ்சபூதங்களால் கட்டப்படிருப்பது போல் நம் உடலும் பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்டுள்ளது.

நிலம் - நாம் உண்ணும் உணவு. இது நம் உடலின் உறுப்பான இரைப்பையோடுத் தொடர்புடையது.

நீர் - நாம் அருந்தும் தண்ணீர். இது நம் உடலின் உறுப்பான சிறுநீரகத்தோடுத் தொடர்புடையது.

காற்று- நாம் சுவாசிக்கும் காற்று. இது நம் உடலின் உறுப்பான நுரையீரலோடுத் தொடர்புடையது.

நெருப்பு- நம் உடல் உழைப்பு. இது நம் உடலின் உறுப்பான இதயத்தோடுத் தொடர்புடையது.

ஆகாயம்- நம் உறக்கம். இது நம் உடலின் உறுப்பான மூளையோடுத் தொடர்புடையது.

நாம் உண்ணும் உணவு
நாம் குடிக்கும் தண்ணீர்
நாம் சுவாசிக்கும் காற்று
நாம் உறங்கும் உறக்கம்
நம் உடல் இயக்க ஆற்றல்

இந்த ஐந்து விடயங்களிலும் கவனம் செலுத்துகின்ற போது தான் நமது ஆரோக்கியம் மேன்மை அடைகிறது முழுமை பெருகிறது.

உடல் ஆரோக்கியத்திற்கு உயிர் கோட்பாடாக இருப்பது நல்ல உடற்பயிற்சியாகும். தவறாமல் தினம் தினம் நாம் மேற்கொள்கிற உடற்பயிற்சிதான் நல்ல ஆரோக்கியத்திற்கு நாம் செய்கிற தலைசிறந்த முதலீடு. நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது: நீங்களே அக்கோவில் (1கொரி 6:19) என்று பவுல் அடிகளார் தெளிவாகவேக் கூறுகிறார். கடவுள் குடிகொண்டிருக்கும் உயிருள்ள ஆலயமாகிய நம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். அப்படி ஆரோக்கியமாக

பராமரிக்காத போது நம்மை நாமே நோயினால் பாழாக்கிக்கொண்டு விரைவில் நாமே பாதிப்படைவோம் என்பதை எந்தளவிற்கு புரிந்து உணர்ந்திருக்கிறோம் என்பது பெருங்கேள்வியாக உள்ளது.

அழுகலும் துர்நாற்றமும் நிறைந்த குப்பை மேட்டில் நம்மால் வாழமுடியுமா? அதுபோல் நோய்கள் நிறைந்த உடலாகிய குப்பை மேட்டில் இறைவன் வாழ்வாரா? நாம்தான் நிம்மதியாக வாழமுடியுமா? இதே மனவோட்டத்தில் திருமந்திரம் 725-ல்

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புனே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேன் என்கிறார் திருமூலர்.

அதாவது, இந்த உடம்பை பாவச்சுமை, இழுக்கானது என நினைத்திருந்தேன். இந்த உடம்பில் பரம்பொருள் இருப்பதை அறிந்தேன். உடம்புக்குள் உத்தமனாகிய பரம்பொருள் கோயில் கொண்டிருப்பதால் உடம்பினைப் பேணிப் பாதுகாத்து வருகிறேன் என்கிறார்.

நாமெல்லாம் ஆட்டம் காணும் அஸ்திவாரத்தில் அழகு மாளிகை கட்ட ஆசைப்படும் அபூர்வ மனிதர்கள். நம்மில் யாரும் தனக்கு நோய் வரவேண்டும் என்று வாழ்வது இல்லை, விரும்புவதும் இல்லை. ஆனால் எவரும் தன் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும் இல்லை என்பதுதான் வேடிக்கையான உண்மை. வயதாலும், படிப்பாலும், பதவியாலும், பணியாலும் தன்னை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம், அப்படி மற்றவர்கள் நம்மை மதிக்காத போது ஆதங்கமும் அதிர்ச்சியும் ஆவேசமும் உச்சமாக பழிவாங்கும் நிலைக்கே செல்கிறோம். ஆனால், நாம் நமக்கு நாமே மதிப்பு கொடுத்துக்கொள்கிறோமா என்று சிந்திக்கிறோமா? நமக்கு நாமே மதிப்பும் மரியாதையும் செய்து கொள்வது என்பது நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வது, இறைவன் வாழும் கோவிலாக ஆரோக்கியமாக வாழ்வதாகும்.

உடலுக்காக செய்கின்ற எந்த ஒரு செயலையும் ஆழ்ந்து, உணர்ந்து, புரிந்து, மகிழ்ந்து செய்யும் போது அதுவே நமக்கு ஆனந்தம் கொடுக்கும் ஒரு ஆன்மீக செயலாக மாறும். உடல், மனம், அறிவு திருப்தி அடைவதே நம் உடல் நலத்திற்கான அபிவிருத்தியாகும். திருமந்திரம், பாடல் 724 - ல் திருமூலர் கூறுகிறார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

அதாவது, உடல் அழிந்துவிட்டால், உயிரும் உடலை விட்டு நீங்கிவிடும். பின், உயிருக்கு உற்ற துணையான மெய்ஞானமாகிய பரம்பொருளை சேர முடியாது. ஆதலால் உடம்பை பாதுகாக்கும் வழிகளை அறிந்து, உடம்பை காப்பாற்றி வளர்த்து அதன்மூலம் உயிரை வளர்த்தேன் என்கிறார்.

"உள்ளம் பெருங்கோயில் உன்னுடம்பு ஆலயம்" என்ற திருமூலரின் திருமந்திரம், உடல் என்ற ஆலயத்தில் மனம் என்ற பெருங்கோயிலில் இறைவன் குடிக்கொண்டிருக்கின்றார் என்பதை நமக்கு எடுத்துச் சொல்கிறது. மகிழ்ச்சியான வாழ்வு வேண்டுமெனில் முதலில் நாம் நம் உடல் நலனில் தொடங்கி பயணிக்கவேண்டும். எனவே, உடல் ஆரோக்கியத்தை பேணிப்பாதுகாப்பதே பேரின்ப வாழ்வுக்கான பெருந்தேவை என்பதை நாம் புரிந்து செயல்படவேண்டும்.

ஆரோக்கியத்தில் முதலீடு செய்வோம்.
ஆனந்தத்தை அறுவடை செய்வோம்.
அனைவரும் நலமுடன் வாழ்வோம்.

வாழ்த்துகளுடன்,

+ ஆயர் A. ஜீவானந்தம்

BIRTHDAY

01.09.1979	Fr. S. Jerome Paulraj	France
02.09.1982	Fr. M. Arun Bellarmin	Singapore
03.09.1968	Fr. L. Robert Selvan	Purathakudi
07.09.1958	Fr. A. Martin de Porres	Kumbakonam
08.09.1960	Fr. I. Mariadoss	Kalpalayam
10.09.1965	Fr. A. Arokia Kennedy Rayan	Kumbakonam
10.09.1973	Fr. A. Benjamin Joseph Raj	Thuraiyur
11.09.1972	Fr. A. David Ramesh	France
11.09.1975	Fr. S. Mariadoss	Konalai
11.09.1977	Fr. S. Joseph Kennedy	Jayankondam
16.09.1991	Fr. S. John Cornilius	Kumbakonam
18.09.1950	Fr. J. John Pannerselvam	Sukkambar
18.09.1961	Fr. S. Gaspar	Purathakudi
18.09.1992	Fr. N. Valan Arasu	USA
22.09.1963	Fr. G. Cosmon Arokiaraj	Kumbakonam
23.09.1976	Fr. A. Rajamanickam	Kumbakonam
26.09.1984	Fr. A. Cyril Richard Kirubaharan	France
28.09.1970	Fr. S. Vincent	Mathur
28.09.1975	Fr. A. Arul Anand	France

NECROLOGY


01.09.2002	Rev. Fr. K. Pauldoss	Kumbakonam
03.09.1989	Rev. Fr. P.X. Gnanadickam	Kumbakonam
11.09.2003	Rev. Fr. Swami Amaladasan	Kumbakonam
13.09.1935	Msgr. M. A. Xavier	Kumbakonam
13.09.2016	Rev. Fr. A. J. Durai	Kumbakonam
16.09.1968	Msgr. A. Antony Joseph	Kumbakonam
16.09.2003	Rev. Fr. M. Arputham	Pullambadi
28.09.2012	Rev. Fr. H. Vallabhanathan	Kumbakonam
30.09.1982	Rev. Fr. M. P.Chinnappar	Kumbakonam

ORDINATION DAY

11.09.2013	Fr. A. Susai Devanesan	Kattuputhur

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

செப்டம்பர்: அனைத்து படைப்புகளுடனான நமது உறவுக்காக...



கடவுளால் நேசிக்கப்படுகின்ற, அன்புக்கும் கண்ணியத்திற்கும் தகுதியான, அனைத்து உயிரினங்களுடனான நமது பரிமாற்றச் சார்புத்தன்மையை, புனித பிரான்சிஸால் உந்தப்பட்டு அனுபவித்திட நாம் மன்றாடுவோம்.

ANNUAL CLERGY RETREAT-2025
DIOCESE OF KUMBAKONAM

VENUE : POONDI MADHA RETREAT CUM WORSHIP CENTRE, POONDI

I BATCH DATES: November 9th to 14th
(Sunday evening to Friday afternoon)
RETREAT FACILITATOR: Rev.Fr. Susai Raj S.J.

II BATCH DATES: November 16th to 21st
(Sunday Evening to Friday afternoon)
RETREAT FACILITATOR : Rev.Fr. Maria Arul Raja, S.J.

Dear Rev.Fathers,

Kindly keep these days blocked in your planner. By next month in the Diocesan News-letter, the list of participants will be printed. If you have any option to change the Batch, you may do so in October 2025.

JUNIOR CLERGY SEMINAR - 2025

Dear Rev. Fathers,

For our Junior Clergy ordained from 2015 to 2025, we are arranging a two-day seminar in **AUXILIUM at Kotagiri on October 29-30, 2025**. All our priests ordained during the above said years except those who are in forighn countries are kindly requested to attend the program without fail. The program will be communicated to the concerned priests.

EDUCATIONAL SCHCOLARSHIP FORMS

Dear Fathers,

To all the Parish priests, were sent five application-forms for the Diocesan educational scholarship to the deserving college students from every parish. About one hundred filled-in-applications are received by the Diocesan Educational Committee. May I kindly request all the parish priests who have not yet sent back the filled - in - application forms, to send them to the Secretary, Diocesan Education Committee, before September 10, 2025. **Kindly ask the applicants to attach also their bank details.**

VOTIVE/SPECIAL MASS FOR CREATION

From the time, *Loudate si* was published by Pope Francis (24 May, 2015), there has been a growing awareness among the Catholics to feel that we are part of the nature and we have the duty to protect it and hand over to our next generations. In continuation, our Holy Father, Pope Leo XIV adds its importance by inviting all Catholics to devote a day and celebrating it also in the Liturgy with a special Mass. This year, the TNBC President invites us to celebrate it on September 21, 2025 Sunday. The Liturgical prayers and the Readings are sent to Vicars Forane. When the Parish Priests come for the Monthly Recollection, they are kindly requested to get a copy from the concerned Vicar Forane and celebrate it in the parishes during the Liturgy with a homily pertaining to the theme on Protection of Nature. The format is also sent in the official diocesan WhatsApp. The two page matter canbe pasted in the tamil missal on page no. 1149 for further use.

Msgr. M. Philomindas
Vicar General

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings from Fr. J. Antony Joseph, Procurator!

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed their Slab and Contributions (August 2025):

Community Hall Contribution Irungalur Parish	1,50,000.00
Contribution from Schools St Xavier's Hr. Sec. School, Purathakudi	1,00,000.00
Little Flower Hr. Sec. School, Annamangalam	8,90,000.00
Contribution from Hostels	
Don Bosco Hostel, Viragalur	2,00,000.00
Salary Contribution	
Fr. G. Arockiaraj - July 2025	85,300.00
Fr. A. Arul Sebastian - July 2025	47,540.00
Fr. R. Frederick David - up to July 2025	5,38,000.00
Fr. U. Rajendrasekar - July 2025	31,616.00
Fr. V.E. Santhakumar- up to June 2025	8,49,675.00
Mass Intentions	
No. 1, Tollgate Parish	11,000.00
Amalashram Parish	30,000.00
Poondi Madha B. Ed. College	19,00,000.00
Pastoral Centre	1,50,000.00
Contribution from Priests	
Fr. M. Adaikalam Donald	210,000.00
Priests Benefit Fund	
Fr. A. William Fernandez, Parish Priest, Konnaikudi	1,00,000.00
Parishioners, Konnaikudi	50,000.00

Slab Contribution

Amalashram Parish for 2024-2025 50,000.00

Pension Contribution

Fr. J. John Panneerselvam for August 2025 7,000.00

All the Parish Priests are kindly requested to ensure that the **Cash Book** and **Ledger** along with all **bills and vouchers**, are updated and kept ready for auditing purposes. The date of our visit for the audit will be communicated to you in due course. We appreciate your cooperation in this matter.

Yours in Christ,
Fr. J. Antony Joseph,
Procurator.

புதிய உதயம்



நமது மறைமாவட்டத்தின் சார்பாக புதிய விவிலிய நாட்குறிப்பேடு அறிமுகம். 100 பிரதிக்கு மேல் வாங்குபவர்களின் பங்கு, பள்ளி, நிறுவனம் அல்லது தங்களின் பெயர் ஒருபக்க அளவில் Multi Colour ல் பதிவு செய்து தரப்படும்.

தொடர்புக்கு : **Fr. I. ஜான்கென்னடி** - 99438 86183

Fr. A. சாம்சன் - 94427 79121

அறிவிப்பு

திருவிவிலியம் தேவைப்படுவோர் மறைமாவட்ட சலுகை விலையில் பெற உடனே அணுகவும் சலுகை விலை இருப்பு உள்ளவரை மட்டுமே

தொடர்புக்கு : **Fr. I. ஜான்கென்னடி** - 99438 86183

வத்திகான் செய்திகள்

01.08.2025- 19-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற இறையியலாளரான புனித ஜான் ஹென்றி நியூமன், புனிதர்பட்ட படிநிலைகளுக்கான திருப்பீடத் துறையின் உறுதியான பரிந்துரையைத் தொடர்ந்து, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் முறையாக திருஅவையின் மறைவல்லுநராக அறிவிக்கப்பட உள்ளார்.

10.08.2025- கடவுள் நமக்குக் கொடுத்த கொடைகளை நமக்காகவே வைத்திருக்காமல், மற்றவர்களின் நன்மைக்காக, குறிப்பாக நமது உதவி மிகவும் தேவைப்படுபவர்களின் நன்மைக்காக அவற்றை தாராளமாகப் பயன்படுத்த வேண்டும் என கடவுள் நமக்கு அறிவுறுத்துகிறார் என்றும், அன்பு மட்டுமே நம் இருப்பின் ஒவ்வொரு அம்சத்தையும் மாற்றியமைத்து, நம்மை மேலும் மேலும் கடவுளைப் போல ஆக்குகிறது என்றும் ஆகஸ்டு 10, ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையின்போது திருத்தந்தை பதினான்காம் லியோ கூறினார்.

10.08.2025 - போர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க தொடர்ந்து செபிப்போம் என்றும், ஹிரோஷிமா மற்றும் நாகசாகி குண்டுவெடிப்புகளின் 80வது ஆண்டு நிறைவானது, மோதல்களைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக, போரை நிராகரிப்பதற்கான அவசியமான தேவையை உலகம் முழுவதும் மீண்டும் எழுப்பியுள்ளது என்றும் தெரிவித்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

12.08.2025- வத்திக்கானில் பணிபுரியும் பெற்றோருக்கான பாதுகாப்புகளையும் உரிமைகளையும் விரிவுபடுத்தி பெற்றோர்வழி விடுப்பு, குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் பெற்றோருக்கான உரிமைகள், கடுமையான ஊனமுற்ற சூழ்நிலைகளில் இருக்கும் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி, கல்வி உதவி போன்றவற்றில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

19.08.2025- ஆகஸ்டு 19, செவ்வாய் மாலை தனது விடுமுறையை காஸ்தல் கந்தோல்போ இல்லத்தில் கழித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு வத்திக்கான் வருவதற்கு முன்பாக செய்தியாளர்களிடம் உரையாடியபோது உலக மக்களின் அமைதிக்காக உண்மையிலேயே முன்னோக்கிச் செல்வதற்கான வழிகளைத் தேட வேண்டும் என்றும், அமைதியை அடைவதற்கான வழிகளைக் காண வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

23.08.2025 - 2012-ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களால் அருளாளராக அறிவிக்கப்பட்ட அருள்சகோதரி மரியா துரொன்காத்தி அவர்கள், தற்போது, அக்டோபர் 19, ஞாயிற்றுக்கிழமை உலக மறைப்பணி ஞாயிறன்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் புனிதராக அறிவிக்கப்பட இருக்கின்றார்.

27.08.2025 - கடவுளின் முதன்மைத்துவம், திருஅவையின் ஒன்றிப்பு, அமைதிக்கான தேடல் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களின் போதனைகள் அடங்கிய லெவ் அவர்கள் எழுதிய, உலகிற்கும், திருஅவைக்குமான வார்த்தைகளான உங்களுக்கு அமைதி உரித்தாகட்டும் என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

27.08.2025 - சீரோ-மலபார் தலத்திருஅவையின் ஆயர் பேரவையினரால் அதிலாபாத் மறைமாவட்ட ஆயராக திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் அங்கீகாரத்துடன் அருள்பணி Joseph Thachaparambath அவர்களும் பெல்தங்காடி மறைமாவட்ட ஆயராக அருள்பணி ஜேம்ஸ் பட்டேரில் CMF அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

03.08.2025 செம்போடை பங்கில் இளைஞர் ஞாயிறு திருப்பலி இளைஞர் இயக்க உறுப்பினர்களால் கொண்டாடப்பட்டது. போதை இல்லாத இளைய சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற தலைப்பில் கருத்தமர்வு நடத்தப்பட்டது.

03.08.2025 காணியிருப்பு பங்கில் இளைஞர் ஞாயிறு திருப்பலி மற்றும் மரக்கன்று நடும்விழா நடைபெற்றது. இயக்க உறுப்பினர்கள் திருப்பலியை சிறப்பு செய்தனர்.

04.08.2025 கேரள மாநில அருட்சகோதரிகளின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒன்றிய அரசையும், சத்தீஸ்கர் மாநில அரசையும் கண்டித்து மாபெரும் பேரணி மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இளைஞர் இயக்க தலைவர்கள், பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

10.08.2025 மலத்தாங்குளம் பங்கின் இளைஞர் ஞாயிறு திருப்பலி மற்றும் இளைஞர் இயக்க அறிமுக கூட்டம் நடைபெற்றது. இதில் பணிக்குழு செயலர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டனர்.

10.08.2025 மாலை 4 – மணியளவில் கும்பகோணம் மறைவட்ட பங்கு இளைஞர் இயக்க தலைவர்களுக்கான கூட்டம் பணிக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடந்தை மறைவட்ட நிர்வாகக்குழு தலைவர், செயலர், பொருளர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

16.08.2025 புனல்வாசல் பங்கில் மாலை 6 மணியளவில் இளைஞர் ஞாயிறு திருப்பலியை இளைஞர் பணிக்குழு

செயலர் நிறைவேற்றினார். தொடர்ந்து இளைஞர் இயக்க முதல் ஆண்டு நிறைவு விழாவும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. புனல்வாசல் பங்குதந்தை முன்னிலையில் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டு இயக்கக் கூட்டம் நடைபெற்றது.

17.08.2025 காலை 6 மணியளவில் அய்யம்பேட்டை பங்கு மாத்தூர் கிளைக்கிராமத்தில் இளைஞர் ஞாயிறு திருப்பிலியை பணிக்குழு செயலர் நிறைவேற்றினார். இதைத் தொடர்ந்து இளைஞர் இயக்க பொறுப்பாளர்களை தேர்வு செய்து இயக்கமாக செயல்பட ஆலோசனை வழங்கப்பட்டது.

17.08.2025 காலை 9.30 மணியளவில் ஒன்பத்துவேலி பங்கில் இளைஞர் ஞாயிறு திருப்பலியை பங்குத்தந்தை மற்றும் பணிக்குழு செயலர் இணைந்து நிறைவேற்றினார்கள். அதைத் தொடர்ந்து இளைஞர் இயக்க கூட்டம் நடைபெற்றது. கிளைகிராம இளைஞர்கள், இளம் பெண்கள் இதில் கலந்து கொண்டு பங்கு இயக்க தலைவர், செயலர், பொருளர் ஆகியோருக்கான தேர்வு நடைபெற்றது. மேலும் இயக்க செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது.

17.08.2025 எஸ். புதூர் பங்கில் இளைஞர் ஞாயிறு திருப்பலி மற்றும் இளைஞர் இயக்க கூட்டம் நடைபெற்றது.

20-22.08.2025 இந்திய அளவிலான இளைஞர் இயக்க பணிக்குழு இயக்குநர்களுக்கான கூட்டம் கேரள மாநிலத்தில் நடைபெற்றது. இதில் நமது குடந்தை மறைமாவட்ட இளைஞர் இயக்க பணிக்குழு இயக்குநர் தந்தை கலந்துகொண்டார்.

செப்டம்பர் மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	செப்டம்பர் 06 மற்றும் 07 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	செப்டம்பர் 20 மற்றும் 21 சனி மற்றும் ஞாயிறு	அருளானந்தர் மறைப்பணி நிலையம், கும்பகோணம்

இவண்,
அருள்பணி S. ஜான் கொர்னேலியுஸ்,
செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

மறைக்கல்வி

09.08.2025 அன்று நெ.1 டோல்கேட் குழந்தை இயேசு திருத்தலத்தில் இலால்குடி மறைவட்டத்தை சார்ந்த பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தில் மற்ற மறைவட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் பங்கேற்று பயன்பெற்றார்கள்.

09.08.2025 அன்று ஜெயங்கொண்டம் மறைமாவட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் தியானம் புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. இரு மையத்திலும் பெரும்பாலும் அனைத்து ஆசிரிய பெருமக்களும் ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கேற்றது சிறப்பானதாக அமைந்தது.

இந்த தியானம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தாளாளர் தந்தையர்கள், தலைமை அசிரியர்கள், ஒப்புரவு அருள்சாதனம் வழங்கிய அருள்தந்தையர்கள், பங்கேற்ற ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது செபங்களும், நன்றிகளும்.

25.08.2025 – 30.08.2025 – செப்டம்பர் மாதம் குடந்தை மறைவட்ட பள்ளிகளுக்கு நடைபெறும் பள்ளி ஆய்விற்கான அறிவிப்பு கடிதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

பெஸ்கி

10.08.2025 கூவத்தூர் பங்கு புனித அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியும்; 23.07.2025 அன்று குடந்தை நால்ரோடு புனித அந்தோணியார் ஆலயத்தில் அருள்பணி. A. யூஜின் டோனி அவர்கள் நிறைவேற்றிய திருப்பலியும் பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

06.08.2025 முதல் 15.08.2025 வரை நடைபெற்ற குடந்தை பேராலய நவநாள் மற்றும் திருவிழா திருப்பலியானது பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு யூடியுப் வழியாக ஒளிபரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

04.08.2025 சட்டிஸ்கர் மாநிலத்தில் நடைபெற்ற அருள்சகோதரிகளின் கைது நடவடிக்கையை கண்டித்து அனைத்து மதத்தினரும் இணைந்து நடத்திய பொதுக்கூட்டம், கும்பகோணம் பழைய மீன் மார்க்கெட் பகுதியில் மாலை 4.00 மணி முதல் 9.00

மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்வின் போது நடைபெற்ற பேரணி மற்றும் கருத்துப் பகிர்வு நிகழ்வினை பெஸ்கி கலைக்குழு ஒலி, ஒளிப்பதிவு செய்து பணிக்குழுவிடம் ஒப்படைத்தது.

10.08.2025 குடந்தை மறைமாவட்ட பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு நடத்திய கறுப்பு தின கூட்டம் மற்றும் அதில் வழங்கப்பட்ட உரைகளை பெஸ்கி கலைக்குழு ஒலி, ஒளிப்பதிவு செய்து பணிக்குழுவிடம் ஒப்படைத்தது.

இவண்,
அருள்பணி A. இராஜமாணிக்கம்,
இயக்குநர், மறைப்பணி மையம்.

விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்

ஆகஸ்ட் மாதம் 5, 6 தேதிகளில் திருச்சி பிராட்டியூரில் இருக்கின்ற அன்பிய தமிழ்நாடு அலுவலகத்தில் அன்பிய இயக்குனர்களுக்கான இரண்டு நாள் கருத்தமர்வு நடைபெற்றது இதில் நமது மறைமாவட்டத்தைச் சார்ந்த இரண்டு அருள் சகோதரிகளும் நம் மறைமாவட்ட செயலரும் கலந்து கொண்டார்கள்.

நமது மறைமாவட்டத்தின் சார்பாக விவிலிய நாட்குறிப்பேடு அச்சிடுவதற்கு கள ஆய்வும், கலந்தாலோசனையும் நடைபெற்றன.

அடுத்த மாதம் விவிலிய மாதம். ஆகவே அனைத்து பங்குகளுக்கும் விவிலிய மாதம் சிறப்பிக்க கையேடு அனுப்பி வைக்கப்பட்டது.

இவண்,
அருள்பணி. I. ஜான் கென்னடி,
செயலர், விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்.

பொதுநிலையினர் பணிக்குழு

26-07-2025 கிறித்தவ வாழ்வுரிமை இயக்கத்தை நமது மறை மாவட்டத்தில் புதுப்பிக்கும் நோக்கோடு தன்னார்வலர் இயக்க செயல்பாட்டு கூட்டமானது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இதில் மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை செயலர், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம், கிறித்தவ சமூக மக்கள் இயக்கம் இவைகளின் பொறுப்பாளர்கள் எட்டு பேர் கலந்து கொண்டனர். கிறித்தவ வாழ்வுரிமை இயக்கத்தை மறைமாவட்ட அளவில் புதுப்பிக்கவும், வலுப்படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. கூட்ட நிகழ்வுகள் குறித்த கருத்துக்கள் மறைமாவட்ட மேய்ப்புப்பணி இயக்குநரிடமும், கும்பகோணம் மறைவட்ட முதன்மை தந்தையிடமும், மாநில ஒருங்கிணைப்பாளரிடமும் பகிரப்பட்டன.

26-07-2025 புள்ளம்பாடி மறைவட்ட அதிபருடன் சந்திப்பு: மறைவட்ட பங்குகளில் பங்கு அமைப்புகளை வலுப்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. முதலாவதாக, புள்ளம்பாடி பங்கில் பங்கு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கூட்டம் நிகழ்த்துவது என்றும் பிறகு இல்லங்கள் சந்திப்பு நிகழ்த்துவது குறித்தும் முடிவு செய்யப்பட்டது.

04-08-2025 சத்தீஸ்கர் மாநிலத்தில் இரு அருட்சகோதரிகளை அநீதியான முறையில் கைது செய்ததை கண்டித்து கும்பகோணத்தில் அனைத்து சமய மற்றும் கட்சிகள் சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஊர்வலத்திலும் தொடர்ந்து நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலும்

கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டார்.

05-08-2025 ஜெயங்கொண்டம் மறைவட்ட முதன்மை குரு அழைப்பின் பேரில் மறைவட்டத்திற்குட்பட்ட பங்கு அருட்பணியர்களின் ஆகஸ்டு மாத கூடுகையில் பொது நிலையினர் பணிக்குழு மற்றும் கிறித்தவ வாழ்வுரிமை இயக்கம் குறித்த அறிமுகம் மற்றும் திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

பங்கு அருட்பணியாளர்களிடமிருந்து கீழ்கண்ட இரு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

1. நமது கத்தோலிக்க கிறித்தவ மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு கொடுப்பது, அரசியலில் ஈடுபடுத்துவது.

2. கத்தோலிக்கத் திருஅவையிலிருந்து பிற சபைகளுக்கு பிரிந்துசென்ற குடும்பங்களை மீண்டும் நம்மோடு இணைய முயற்சிகள் எடுப்பது.

நெட்டலங்குறிச்சி பங்கு அருட்பணியாளர் தனது பங்குமக்கள் ஆன்மிக வளர்ச்சியுற முயற்சிகள் செய்ய பணிக்குழுவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மேற்கண்ட கூடுகைக்கு மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு செயலர் உடன் வந்து தங்களது பணிக்குழு குறித்த செயல்திட்டங்களை விளக்கினார்.

05-08-2025 புள்ளம்பாடி பங்கு அமைப்புகளின் பொறுப்பாளர்களின் கூட்டம் (20 நபர்கள்) மறைவட்ட அதிபர் தந்தை முன்னிலையில் நடைபெற்றது. பொறுப்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய தனிமனித குடும்ப செப வாழ்வு,

பங்கு அமைப்புகளில் அருட்பணியாளரோடும் இணைந்து செயலாற்ற வேண்டியவை குறித்து உரையாற்றப்பட்டது. பங்கிற்குட்பட்ட அனைத்து குடும்பங்களிலும் இல்லங்கள் சந்திப்பு நிகழ்த்துவதென முடிவு செய்யப்பட்டது.

12-08-2025 தமிழக பொது நிலையினர் பணிக்குழுவின் புதிய தலைவர் மேதகு ஆயர் சகாயராஜ் அவர்களுக்கு வரவேற்பும், மேனாள் தலைவர் பேராயர் மேதகு அந்தோனி பாப்புசாமி அவர்களுக்கு நன்றியறிதல் நிகழ்வும் திருச்சி பிராட்டியூர் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெற்றன. மறைமாவட்டம் சார்பாக இரு பொதுநிலையினர் கலந்துகொண்டு புதிய ஆயர் அவர்களுக்கு ஏழைகளுக்கு உதவிடும் ஆடைகளை பரிசாக வழங்கினர்.

13-08-2025 தமிழக பொது நிலையினர் உருவாக்க மையத்தில் ஆகஸ்டு முதல் நவம்பர் 2025 வரை நடைபெறவுள்ள நான்கு கட்ட கருத்தாளர் பயிற்சிக்கு நமது மறைமாவட்டம் சார்பாக திரு. அமல்ராஜ், ஜெயங்கொண்டம், திருமதி. லதா அமல்ராஜ், கும்பகோணம் என்ற இருவரை தெரிவு செய்து பெயர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

13-08-025 மறைமாவட்டத்தில் உள்ள பொது நிலையினர் தங்களுடைய தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு மற்றும் திருஅவையில் அவர்களின் ஈடுபாட்டை சிறப்பாக வளர்ப்பதற்காக சிவகங்கை மறைமாவட்ட நற்செய்தி பணிக்குழுவோடு இணைந்து ஒவ்வொரு மறைவட்டத்திற்குட்பட்ட பங்குகளிலும் இல்லங்கள் சந்திப்பு நடத்துவதென முடிவு செய்து அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டுள்ளன. வரும் அக்டோபர்

2025 முதல் இத்தகைய செயல்பாடுகளை துவக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

23-08-2025 பெரம்பலூர் மறைவட்டத்திற்கான மேய்ப்புப்பணியை சீரமைப்பதற்காக மறைவட்டத்திற்குட்பட்ட பங்குகளின் மேய்ப்புப்பணி பிரதிநிதிகள் கூட்டமானது பெரம்பலூர் புனித பனிமயமாதா ஆலயத்தில் மறைவட்ட அதிபர் தலைமையில் நடந்தது. பங்கு பிரதிநிதிகள் தங்கள் தனிப்பட்ட வாழ்வில் குடும்ப வாழ்வில் வளர்வதும் பங்கு அமைப்புகளில் இணைந்து செயல்படுவதும் பங்கு அருட்பணியாளருடன் இணைந்து திரு அவையை உயிரோட்டமாக கொண்டு செல்வது குறித்தும் பணிக்குழு செயலரால் உரை நிகழ்த்தப்பட்டது. நான்கு மாதங்களுக்கொருமுறை கூடுகை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

செப்டம்பர் 2025 செயல் திட்டங்கள்:

1. கிறித்தவ வாழ்வுரிமை இயக்கத்தை கும்பகோணம் பங்கு மற்றும் கிளை பங்குகளில் புதிதாக துவங்குவது,

2. கும்பகோணம் மறைவட்ட பங்கு அருட்பணியாளர்களின் கூடுகையில், பணிக்குழு செயல்பாடுகளின் தொடர்பான அறிமுக மற்றும் செயல் திட்டங்களை விளக்குவது,

3. மேய்ப்புப் பணிகளைச் சிறப்பாக செய்யும் நோக்கில் மறை மாவட்டத்தில் இயங்கும் மற்ற பணிக்குழுக்களின் செயலர்களோடு கலந்தாலோசித்து இணைந்த திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவது.

இவண்,

திரு. செ. பாப்பு வில்லியம்,

செயலர், பொதுநிலையினர் பணிக்குழு.

பெண்கள் பணிக்குழு

27.7.2025 தாத்தாக்கள், பாட்டிகள், மூத்தோர் தின விழா கும்பகோணம், நடுவலூர், சிக்கல் நாயக்கன் பேட்டை, வடகரை, காணியிருப்பு, டோல்கேட், குவனெல்லா நகர், மைக்கேல் பட்டி, திருக்காவலூர், செம்போடை, ஏலாக்குறிச்சி ஆகிய பங்குகளிலும் மற்றும் பெரும்பாலான பங்குகளில் திருப்பலி வழியாக சிறப்பித்து பெரியோர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

30.7.2025 தாத்தாக்கள், பாட்டிகள் தினம் முன்னிட்டு கும்பகோணம், சீனிவாசநல்லூரில் உள்ள ஆதரவற்றோர், முதியோர் இல்லத்தில் இருக்கும் 42 மூத்தோர்களுக்கு பெண்கள் இயக்க பொறுப்பாளர்கள் ஒரு நாள் உணவு வழங்கினார்கள். பணிக்குழு செயலர் மற்றும் பொறுப்பாளர்கள் 13 பேர் அவர்களுடன் மதிய உணவருந்தி ஜெபித்து வந்தார்கள்.

02.08.2025 மறைமாவட்ட அளவில் பெண்களுக்கான கூட்டம் பூண்டியில் பணிக்குழு செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆறு மறை வட்டங்களில் இருந்து 45 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

04.08.2025 ஜெயங்கொண்டம் மறைவட்ட அருட்தந்தையர்களின் மாதாந்திர தியானம் கீழமிக்கேல்பட்டியில் நடைபெற்றது. இதில் பணிக்குழு செயலர் அவர்கள் பங்கேற்று பங்கு தளங்களில் பெண்கள் இயக்கம் தொடங்குவது தொடர்பாக அருட்தந்தையர்களிடம் ஆலோசனை பெற்று வந்தார்கள்.

8.08.2025 மைக்கேல்பட்டி மறைவட்ட முதன்மைகுரு அருள்தந்தை S. இன்னொசென்ட் அவர்களை சந்தித்து மைக்கேல்பட்டி மறைவட்ட பங்குகளில் பெண்கள் இயக்கம் தொடங்க கலந்து ஆலோசிக்கப்பட்டது.

13.08.2025 முதல் 21.8.2025 வரை NBLC-யில் நடைபெற்ற தலைமைத்துவ பயிற்சியில் பணிக்குழு செயலாளர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

27,28.08.2025 செப்டம்பர் 8 - அன்னை மரியாளின் பிறப்பு நாள் அன்று பெண் குழந்தைகள் தினம் அனைத்து பங்குகளிலும் சிறப்பிக்க துண்டு பிரசுரங்கள், திருவழிபாட்டு குறிப்புகள் அனைத்தும் அனுப்பி வைக்கப்பட்டன.

30.08.2025 மறைமாவட்ட அருள்பணி நடுவம் நல்லாயன் நிலையம் மேலப்புதூர் திருச்சியில் - திருச்சி மண்டல கருத்தாளர் பயிற்சி நடைபெற்றது. நமது மறை மாவட்டத்தில் இருந்து செயலருடன் 5 மறைவட்டத்தில் இருந்து 10 பேர் கலந்துகொண்டு பயனடைந்து வந்தார்கள்.

இவண்,
அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா, DSMP
செயலர், பெண்கள் பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

17.06.7025 – 19.07.2025 – மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் இருக்கும் அனைத்து பங்குகளிலும் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்கள் சந்திக்கப்பட்டு ஆகஸ்ட் 10 கருப்பு நாளுக்கான அச்சுப்பிரதிகளை கோயில்பிள்ளை, கிராம நாட்டாண்மைகள், அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களிடம் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. இருதயராஜ்,

வேதியர் அடைக்கலராஜ் மற்றும் நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் செல்வன். தமிழரசன் ஆகியோர் நேரடியாக சென்று கொடுத்தார்கள்.

20.07.2025 - 22.07.2025 இலால்குடி மற்றும் புள்ளம்பாடி மறைவட்டங்களில் இருக்கும் அனைத்து பங்குகளிலும் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்கள் சந்திக்கப்பட்டு ஆகஸ்ட் 10 கருப்பு நாளுக்கான அச்சுப்பிரதிகளை கிராம தலைவர்கள், அன்பிய பொறுப்பாளர்கள், இளைஞர்கள், கோயில்பிள்ளை மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களிடம் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. இருதயராஜ், வேதியர் அடைக்கலராஜ், நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் செல்வன். தமிழரசன் மற்றும் களப்பணியாளர் திருமதி. எலிசபெத்ராணி ஆகியோர் நேரடியாக சென்று கொடுத்தார்கள்.

23.07.2025-25.07.2025 - ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் இருக்கும் அனைத்து பங்குகளிலும் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்கள் சந்திக்கப்பட்டு ஆகஸ்ட் 10 கருப்பு நாளுக்கான அச்சுப்பிரதிகளை கிராம நாட்டாண்மைகள், அன்பிய பொறுப்பாளர்கள், இளைஞர்கள் மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களிடம் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. இருதயராஜ், நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் மற்றும் களப்பணியார் அந்தோணி பிராங்ளின் ஆகியோர் நேரடியாக சென்று வழங்கினார்கள்.

28.07.2025-05.08.2025 - கும்பகோணம் மறைவட்டத்தில் இருக்கும் அனைத்து பங்குகளிலும் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்கள் சந்திக்கப்பட்டு ஆகஸ்ட் 10 கருப்பு நாளுக்கான அச்சுப்பிரதிகளை பங்கு தந்தையர்கள், அருள்சகோதரிகள், கிராம நாட்டாண்மைகள், அன்பிய

பொறுப்பாளர்கள், இளைஞர்கள், மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களிடம் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. இருதயராஜ், நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாநில களப்பணியார் சுமதி ஆகியோர் நேரடியாக சென்று வழங்கினார்கள்.

06.08.2025 கும்பகோணம் மறைவட்டத்தில் இருக்கும் அனைத்து பங்குகளிலும் உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்கள் சந்திக்கப்பட்டு ஆகஸ்ட் 10 கருப்பு நாளுக்கான அச்சுப்பிரதிகளை கிராம நாட்டாண்மைகள், அன்பிய பொறுப்பாளர்கள், இளைஞர்கள், மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களிடம் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. இருதயராஜ், நடுமண்டல ஒருங்கிணைப்பாளர், களப்பணியாளர் மற்றும் சமூக ஆர்வலர் திரு. ராஜா ஆகியோர் நேரடியாக சென்று வழங்கினார்கள்.

10.08.2025 தூய அலங்கார அன்னை பேராலயம் (காமராஜர் சாலை) அருகில் காலை 11.30 மணியளவில் ஆகஸ்ட் 10 துக்கநாள் அனுசரிப்புக்கான கண்டன ஆர்ப்பட்டம் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு M. பிலோமின்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் பணிக்குழுவின் செயலர் அருள்பணி A. இருதயராஜ் அவர்கள் வரவேற்றார்கள். பேரருட்திரு. G. கோஸ்மான் ஆரோக்கியராஜ் (கும்பகோண மறைவட்ட முதன்மை தந்தை) , அருள்பணி. நித்திய சகாயம் OFM (மாநில செயலர், உதயதீபம், திருச்சி), மறைமாவட்ட அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகள், திரு.

விவேகானந்தம் (விசிக), திரு. பாரதி (CPI), திரு. கண்ணன் (CPM), திரு. குடந்தை அரசன், திரு. செல்வராஜ் (சமூக ஆர்வலர்), திரு. ஜான் (மேனாள் நகர மன்ற உறுப்பினர்), திரு. சகாயராஜ் (மேனாள் பங்குப் பேரவை செயலர்), திரு. ஜோசப் நவநீதன் ஆசிரியர், திரு. ராஜா ஆசிரியர் ஆகியோர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு மத்திய, மாநில அரசுக்கெதிராக கண்டன முழக்கமிட்டு தங்களது கண்டனத்தை பதிவு செய்தார்கள். இதில் 450 பேர் கலந்துகொண்டார்கள்.

13.0.2025 காலை 10.30 மணியளவில், ஆகஸ்ட் 10 கருப்பு நாள் அனுசரிப்பு பற்றிய மனுவை பணிக்குழுவின் செயலர் தந்தை. இருதயராஜ், வேதியர். அடைக்கலராஜ், திரு. ஜான், திரு. ஜான் ஜோசப், திரு. ராஜா (சமூக ஆர்வலர்) திரு. கார்த்திக (வழக்கறிஞர்) ஆகியோர் நேரடியாக சென்று வருவாய் கோட்டாச்சியர் (பொதுபிரிவு) அவர்களிடம் வழங்கினார்கள்.

இறையேசுவில் பிரியமான பங்குத்தந்தையர்கள் அனைவருக்கும் குடந்தை மறைமாவட்ட பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழுவின் சார்பாக வாழ்த்துக்களும் வணக்கங்களும்...

தாங்கள் இப்பணிக்குழுவிற்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதை குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 10.08.2025 – ஞாயிற்றுக்கிழமை தூய அலங்கார அன்னை பேராலயம் அருகில் ஆகஸ்ட் 10 துக்கநாள் அனுசரிப்புக்கான கண்டன ஆர்ப்பட்டம் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு. M. பிலோமின்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அன்போடு தங்கள் பங்கில் இருக்கிற தலித் கிறிஸ்தவ மக்களை அனுப்பி வைத்தீர்கள். மேலும் தங்கள் பங்கில்

உள்ள தலித் கிறிஸ்தவ கிராமங்களில் அன்றைய தினம் கருப்புக்கொடி ஏற்றி கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள். எனவே, மேதகு ஆயர், பங்குத்தந்தையர்கள், அருள்சகோதரிகள், கிராம நாட்டாண்மைகள், அன்பிய பொறுப்பாளர்கள், இளைஞர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டு, தங்களின் பணிசிறக்க உங்களை மனதார வாழ்த்தி செபிக்கிறேன்.

இவண்,
அருள்பணி. A. இருதயராஜ்,
செயலர், பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம் ஆகஸ்ட்-2025

நெ.	விபரம்	தொகை
1	அருள்பணி. M. குழந்தைராஜ், முசிறி	10,000
	இறைமக்கள், முசிறி	2000
2	அருள்பணி G. கோஸ்மான் ஆரோக்கியராஜ், கும்பகோணம்	5000
3	அருள்பணி S. இன்னொசன்ட், மைக்கேல்பட்டி	15,500
	மைக்கேல்பட்டி பங்கு மற்றும் கிளைகிராம இறைமக்கள்	47,275
4	புனித அலோசியஸ் தொடக்கப்பள்ளி, மைக்கேல்பட்டி	2000
5	தூய இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மைக்கேல்பட்டி	5000
6	அருள்பணி A. சாம்சன், குமிழங்குழி	2000
7	திரு. ஞானசேகரன் குடும்பத்தார், மாதாபுரம்	1000
8	பிலோமினாள் R.C தொடக்கப்பள்ளி, திருக்காவலூர்	4000
	மொத்தம்	**93,775**





புதுப்பிக்கப்பட்ட ஆலயம் : கொன்னைக்குடி



புதுப்பிக்கப்பட்ட அதிதூதர் மக்கள் மஹால் : மைக்கேல்பட்டி





உறுதிப்பூசுதல் : மைக்கேல்பட்டி

KUMBAKONAM DIOCESE NEWS LETTER

Pastoral Visit, Michaelpatti










Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112